

மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து தெற்கு 2- ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் அதன் பகுதி செயலாளர் கே.கலைச்செல்வம் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், ஏ.பார்த்திபன், ஒட்டுரணி திருமுருகன்,கவுன்சிலர் ரூபினிகுமார் மற்றும் ராஜபாண்டி, எஸ்.முருகன், வி.சரவணகுமார், எஸ்.பாலகிருஷ்ணன், கே.குமரவேல், கணேஷ்பாபு, கே.டி.நீலகண்டன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கேரம் போட்டியில் தங்கம் பதக்கம் வென்று மேலூர் மாணவர் சாதனை



**மேலூர், ஆக.11-**

மதுரை மாவட்டம், மேலூர் டவுன் காந்தி நகரை சேர்ந்த லாரி டிரைவர் சதாசிவம் கவிதா இவர்களின் மகன் சரண் குமார் வயது 20 இவர் கோயம்புத்தூரில் உள்ள ஸ்ரீ அபிராமி பாரா மெடிக்கல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு டயாலிசிஸ் படிப்பு பயின்று வருகிறார்.

நேபாளத்தில் உள்ள போக்ராவில் நடைபெற்ற ஆசிய அளவிலான கலப்பு இரட்டையர் கேரம் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி சார்பாக மேலூர் சரண்குமார் புதுக்கோட்டை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் ஆகியோர் போட்டியில் கலந்து கொண்டனர். கேரம் போட்டியில் சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, பூடான், நேபாளம் ஆகிய ஐந்து நாடுகளின் வீரர்கள் பங்கேற்றனர்.

இதில் இறுதிப் போட்டியில் இந்தியா நேபாளம் மோதின.இந்திய அணி சார்பில் சரண்குமார் கோபாலகிருஷ்ணன் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று இந்திய அணிக்கு தங்கப்பதக்கம் பெற்று தந்தனர். இதனை அடுத்து மேலூரில் சரண்குமாருக்கு மேளதாளத்துடன் வாண வேடிக்கை முழங்க சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

அப்போது சரண் குமார் பேசியதாவது: என்னை போன்ற கிராமப்புறங்களில் இருந்து செல்லும் விளையாட்டு மாணவர்களுக்கு கல்வியில் சலுகை அரசு தர வேண்டும். அப்படி சலுகை அரசு வழங்கினால் கிராம புற மாணவ மாணவிகள் இன்னும் விளையாட்டு போட்டியில் பங்கேற்று இந்தியாவிற்கு பெருமை சேர்ப்பார்கள் என்று இவ்வாறு கூறினார்.

இதில் மேலூர் லயன்ஸ் கிளப் சங்கத் தலைவர் கேபிள் டிவி லயன். கண்ணன், செயலாளர் லயன்.ஞானசுந்தர பாண்டியன், பொருளாளர் லயன்.நவநீத கிருஷ்ணன் ஆகியோர் பொன்னாடை போர்த்தினர். மேலூர் டைமண்ட் ஜூப்ளி கிளப் சங்கத் தலைவர் மணிவாசகம், மேலூர் தாலுகா ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் பாலகிருஷ்ணன், ஜாஸ் பள்ளி தாளாளர் ஷாம், மேலூர் பாஜக சார்பில் ஆனந்த ஜெயம், சேவுகமூர்த்தி, இளமுருகன், மற்றும் ஸ்பார்ட்னர்ஸ் பிட்னஸ் எஸ்.ராஜேஷ், பயிற்சியாளர் ஜோயல் எமர்சன் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், பொதுமக்கள் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

# பரமக்குடியில் நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்



**பரமக்குடி, ஆக. 11-**


ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஆயிரவைசிய மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மருத்துவ அரங்குகளை பார்வையிட்டு பொதுமக்களுக்கு சிகிச்சை வழங்குவதன் விவரங்களை கேட்டறிந்தார்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் திட்டம் மக்களைத் தேடி முழு உடல் பரிசோதனை திட்டம் என்கிற வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முழு உடல் பரிசோதனை செய்து கொள்வதற்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.15,000/- வரையிலும், அரசு மருத்துவமனைகளில் ரூ.4,000/- வரை செலவாகும். முழு உடற்பரிசோதனை என்பது இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த வகையில் இத்திட்டம் பொதுமக்களுக்கு இலவசமாக முழு உடல் பரிசோதனை செய்து தரப்படும் திட்டமாகும்.

இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு மருத்துவ அறிக்கைகள் அனைத்தும் எச்ஐஎம்எஸ் 3.0 மூலம் கணினி மையமாக்கப்பட்டு முகாமிலேயே மருத்துவ பரிசோதனை சான்றுகள் மற்றும் மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுகிறது. பின்னர் இம்முகாமில் மருத்துவ பரிசோதனை செய்து கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார். முன்னதாக பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் முகாமை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

மேலும் இம்முகாமில் பரமக்குடி சுகாதார அலுவலர் மரு.லெட்சுமி நாராயணன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அர்ஜுன்குமார், இணை இயக்குநர் மரு.பிரகலாதன், பரமக்குடி நகர் மன்றத்தலைவர் சேது கருணாநிதி, பரமக்குடி நகர் மன்ற துணைத்தலைவர் குணசேகரன், வட்டார மருத்துவ அலுவலர்கள் மரு. கார்த்திக், மரு.ஜெயந்த், மரு. ராஜேஷ், மரு.ராமச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கள்ளிமந்தயத்தில்
# அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்



**ஒட்டன்சத்திரம், ஆக.11-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரியாம்பட்டி ஊராட்சி கூலசின்னாம் பட்டியைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது தொப்பம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் பி. சி. தங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## நத்தம் அருகே
# கதம்பவண்டு கடித்து தொழிலாளி சாவு

**நத்தம், ஆக.11-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ஏரக்காபட்டியை சேர்ந்தவர் ஜெகன் (28). தேங்காய் உரிக்கும் தொழிலாளி.இவர் கடந்த 8-ம் தேதி செங்குளம் பஸ் ஸ்டாப் பகுதியில் உள்ள தென்னந்தோப்பில் தேங்காய் உரித்து கொண்டிருந்தார். அப்போது தோப்பில் கூடி கட்டியிருந்த கதம்ப வண்டுகள் ஜெகனை முதுகு, தலை, கைகளில் கடித்தது. இதில் பலத்த காயமடைந்து வலியில் துடிதுடித்த ஜெகனை அக்கப்பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் நேற்று முன்தினம் ஜெகன் இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து போலீஸ்-இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# இந்தியா முழுவதும் 1250க்கும் மேற்பட்ட மையங்களுடன் 23வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் எஸ்ஐபி அகாடமி

**சென்னை, ஆக 11-**

குழந்தைகளின் திறமைகளை மேம்படுத்தி அவர்களுக்கு சிறந்த பயிற்சி அளித்து அவர்களின் லட்சியக் கனவுகளை நனவாக்குவதில் எஸ்ஐபி அகாடமி 22 ஆண்டுகளை நிறைவு செய்து தற்போது 23வது ஆண்டில் அடியெடுத்து வைத்து சிறப்பானதொரு சாதனையை படைத்துள்ளது. இதற்கு இந்தியா முழுவதும் 1250க்கும் மேற்பட்ட மையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எஸ்ஐபி அபாகஸ், குளோபல்ஆர்ட், மிகிட்ஸ் மற்றும் கிரிகோ இங்லீஷ் போன்ற பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கி வரும் இந்த அகாடமி, தனது 22வது ஆண்டு நிறைவு விழாவை சென்னையில் உள்ள ஜிஆர்டி ஓட்டலில் வெகுவாக சிறப்பாக கொண்டாடியது. இதில் இதன் கூட்டு நிறுவனங்கள், முன்னாள் மாணவர்கள், கல்வியாளர்கள் என ஏராளமான பேர் பங்கேற்றனர். கடந்த 22 ஆண்டுகளில் மட்டும் இந்தியா முழுவதும் இந்த மையத்தின் மூலம் 14 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பலன் அடைந்து இருப்பதாக இந்நிகழ்ச்சியின் போது எஸ்ஐபி அகாடமி தெரிவித்தது.

இந்த கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சமாக இந்த அகாடமி 3 முக்கிய திட்டங்களை அறிவித்தது. அவை, தேசிய அளவிலான கணிதப் போட்டி10-வது ஆண்டாக இந்த அகாடமி எண்கணித மேதை போட்டியை அறிவித்துள்ளது. இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் இதில் வெற்றி பெறும் தேசிய வெற்றியாளர்கள் ஸ்ரீஹரிகோட்டாவில் இஸ்ரோ ராக்கெட் ஏவுதலை நேரடியாகப் பார்க்கும் மறக்க முடியாத அனுபவத்தைப் பெறுவார்கள்.

இதன் மூலம் அறிவியல் மற்றும் விண்வெளியில் இந்தியாவின் துணிச்சலான சாதனைகளை நேருக்கு நேர் பார்க்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும். இது குறித்து எஸ்ஐபி அகாடமியின் நிர்வாக இயக்குனர் தினேஷ் விக்டர் கூறுகையில், பலர் குறுக்கு வழியை தேடி ஓடும் இந்த உலகில், நாங்கள் ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ள உண்மையான திறன்களை வளர்ப்பதில் உறுதியாக இருக்கிறோம், எங்களின் இந்த 22 ஆண்டு கால சாதனை என்பது இதில் பணியாற்றும் ஒவ்வொரு ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு சொந்தமானது. எங்கள் அடுத்த அத்தியாயமானது புதுமை, நிலைத்தன்மை மற்றும் முழு மனதுடன் மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றியதாகும் என்று கூறினார்.

# உங்கள் உணவில் சுத்தமான பால் தினசரி இடம் பெற வேண்டியதன் காரணம்

**சென்னை, ஆக 11-**

ஹெரிடேஜ் ஃபுட்ஸ் நிறுவனத்தில், தூய்மை என்பது ஒரு வார்த்தை மட்டுமல்ல அல்ல, அது ஒரு வாக்குறுதி என்று நாங்கள் நம்புகிறோம். சுத்தமான பால் ஏன் மிகவும் மதிப்புமிக்கது மற்றும் தினசரி உங்கள் உணவில் ஒரு குவளை பால் சேர்ப்பது எப்படி ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதற்கான காரணங்கள்,இயற்கையாகவே வலுவான எலும்புகள் மற்றும் தசைகளை உருவாக்குகிறது. சுத்தமான பால், கால்சியம், புரதம் மற்றும் வைட்டமின் டி ஆகியவற்றின் செறிவான, இயற்கையான மூலமாகும். இந்த மூன்று ஊட்டச்சத்துக்களும் ஒன்றாகச் சேர்ந்து உங்கள் எலும்புகளை வலுவாகவும், தசைகளைச் சுறுசுறுப்பாகவும், உடல் அமைப்பை ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகின்றன. உங்கள் குழந்தைகள் வளர்கிறார்களோ அல்லது உங்கள் பெற்றோர்கள் வயது முதிர்ந்தவர்களோ, ஒரு நாளைக்கு ஒரு குவளை பால் குடிப்பது அனைவரையும் வலிமையுடனும், உடலை எளிதாகவும் வைத்திருக்க உதவுகிறது.

சோர்வை அகற்றி, கவனம் மற்றும் ஆற்றலை அதிகரிக்கிறது.சர்க்கரை பானங்கள் அல்லது உடனடி பானங்களை மறந்துவிடுங்கள். பால், பி12 மற்றும் ரிபோஃப்ளேவின் போன்ற ஊட்டச்சத்துக்களுடன் நிலையான ஆற்றலை வழங்குகிறது. இது மூளையின் செயல்பாட்டிற்கும், மனத் தெளிவுக்கும் உதவுகிறது. பால் உடலுக்கு மட்டும் ஊட்டமளிப்பதில்லை, உணர்ச்சி சமநிலையையும் ஆதரிக்கிறது. சுத்தமான பாலில் உள்ள இயற்கையான மெக்னீசியம், வைட்டமின்கள் பி மற்றும் டி ஆகியவை மனநிலையை மேம்படுத்தவும், சோர்வைக் குறைக்கவும் உதவுகின்றன. வாழ்க்கை பரபரப்பாக இருக்கும் போது, ஒரு குவளை பால் நிலையான சக்தியை வழங்க முடியும். இதில் சேர்க்கப்பட்ட மாவுச்சத்தோ, செயற்கை தடிமனாக்கிகளோ அல்லது அதன் இயற்கையான சமநிலையை மாற்றும் செயற்கை செறிவூட்டல்களோ இல்லை. ஹெரிடேஜ் ஃபுட்ஸ், பால் உண்மையிலேயே தூய்மையாக இருப்பதை உறுதி செய்கிறது. எனவே, உங்கள் குடும்பத்தினர் அதன் இயற்கையான நன்மைகளை ஒவ்வொரு நாளும் முழு நம்பிக்கையுடன் அனுபவிக்க முடியும்.

## சித்திரைத் திருவிழாவில் கள்ளழகர் ஆற்றில் எழுந்தருளுவதைப் போல
# மதுரை மாவட்டத்தில் புரட்சி பயணத்தை மேற்கொள்ள இருக்கிறார் எடப்பாடியார்
## சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி

**மதுரை, ஆக 11-**

சித்திரைத் திருவிழாவில் கள்ளழகர் ஆற்றில் எழுந்தருளுவதைப் போல மதுரை மாவட்டத்தில் புரட்சி பயணத்தை எடப்பாடியார் மேற்கொள்ள இருக்கிறார் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

உசிலம்பட்டி தொகுதியில் உள்ள 58 கால்வாய்க்கு தண்ணீர் திறக்க கோரி மாவட்ட கலெக்டரிடம், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் கோரிக்கை மனு அளித்தார். பின்னர் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது- 58 கால்வாய் திட்டத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று எடப்பாடியாரிடம் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். இதனை தொடர்ந்து அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லும் வகையில் தற்போது கோரிக்கை மனு அளிக்கப் பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடியார் 4-ம் கட்ட சுற்றுப்பயணமாக செப்டம்பர் மாதத்தில் மதுரையில் நடைபெற உள்ளது. சித்திரைத் திருவிழாவில் கள்ளழகர் ஆற்றில் எழுந்தருளுவதைப் போல மதுரை மாவட்டத்தில் எடப்பாடியார் புரட்சி பயணத்தை மேற்கொள்ள இருக்கிறார்.



மதுரை மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களை எடப்பாடியார் வழங்கியுள்ளார் , வைகை நதி சுருங்குவதை தடுக்கம் வகையில் இரு கரைகளும் சாலை அமைத்தார்.வைகை ஆற்றில் 425 இடங்களில் கழிவு நீர் கலக்கிறதுவைகை நதியில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு திட்டங்கள் கொண்டு வரப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் திமுக அரசு. அத்திட்டத்தை கைவிட்டுள்ளது.

கோயில் மாநகரமாக இருந்த மதுரை ஊழல் மாநகராக மாற்றியது தான் திமுக செய்த சாதனையாகும் .வளர்ச்சி திட்டங்களுக்கும், நிதிக்கும், தொலைநோக்கு திட்டங்களுக்கும், மக்கள் மீது எந்த அக்கறையும் திமுக காட்ட வில்லை.இன்றைக்கு திமுக ஆட்சி கண்டு எடப்பாடியாருக்கு வயிற்றில் எரிச்சல் என்று ஸ்டாலின் கூறுகிறார். எழுச்சி பயணத்தில் எடப்பாடியார் யாரையும் தவறாக பேசவில்லை ஆதாரத்துடன் தான் பேசி வருகிறார். எடப்பாடியார் எழுச்சி பயணத்தை குறைவான மதிப்பீடு செய்தவர்கள். இன்றைக்கு குளிர் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. கடந்த 7.7. 2025 அன்று எடப்பாடியார் தொடங்கிய எழுச்சி பயணத்தை கண்டு முதல்வர் ஸ்டாலினுக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது இதற்கு காரணம் எடப்பாடியாருக்கு மக்களிடம் இருந்து கிடைத்த வரவேற்பு தான். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கழக அமைப்பைச் செயலாளர் மகேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசன் நீதிபதி, எஸ் எஸ் சரவணன், மாணிக்கம், கருப்பையா, மாநில நிர்வாகிகள் வெற்றிவேல் ,தனராஜன், புளியங்குளம் ராமகிருஷ்ணன், அன்னபூர்ண தங்கராஜ், ஒன்றிய கழகச் செயலாளர்கள் அன்பழகன், ராமசாமி ,கண்ணன், காளிதாஸ், அரியூர் ராதாகிருஷ்ணன், மாவட்ட கழக நிர்வாகிகள் தமிழ் செல்வம், வக்கீல் திருப்பதி, பொதுக்குழு உறுப்பினர் சுதாகரன், நகரச் செயலாளர் பூமாராஜா, மாவட்ட அணி நிர்வாகிகள் வக்கீல் பாஸ்கரன், மகேந்திர பாண்டி, சிங்கராஜா பாண்டியன் ஆதிராஜா வசக்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில்
# 19 வயதுக்குட்பட்டோருக்கு குடற்புழு நீக்க மாத்திரை இன்று வழங்கப்படுகிறது

**ராமநாதபுரம்,ஆக.11-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று 11-ந் தேதி 19-வயதுக்குட்பட்டோருக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட உள்ளதாக கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இரத்தசோகையை தடுக்கும் பொருட்டு தேசிய குடற்புழு நீக்க நாள் பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் முறையே வருடந்தோறும் இருமுறை நடைபெறுகிறது. இவ்வாண்டில் 11.08.2025 தேதி தேசிய குடற்புழு நீக்கும் முகாம் நடைபெறவுள்ளது. ஒரு வயது முதல் 19-வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் இனப்பெருக்க வயதுள்ள 20-30 வயதுள்ள பெண்களுக்கும் அல்பன்டசோல் மாத்திரை (குடற்புழு நீக்க மாத்திரை) வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குடற்புழு நீக்க மாத்திரை அனைத்து குழந்தைகளுக்கும் கொடுப்பதன் மூலம் குடலில் உள்ள புழுத்தொற்று நீங்குவதுடன் மற்றவர்களுக்கும் பரவாமல் தடுக்கப்படுகின்றது. இதன் மூலம் இரத்தசோகை குறைபாடு ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது.

மேலும், குடற்புழு தாக்கத்தினால் ஏற்படக்கூடிய வயிற்று வலி, வயிற்றுப்போக்கு, வாந்தி, சோர்வு மற்றும் படிப்பில் ஆர்வமின்மை ஆகியவை ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 3,39,914 பள்ளி மாணவர்கள், பள்ளி செல்லா குழந்தைகள் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கும், 20-30 வயதுள்ள (கர்ப்பமில்லாத மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர) 69,152 பெண்களுக்கும் வழங்கப்படவுள்ளது. இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

## வத்தலக்குண்டு அருகே
# விராலிப்பட்டியில் தி.மு.க. பொதுக்கூட்டம்



**வத்தலக்குண்டு, ஆக.11-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு ஒன்றியம் விராலிப்பட்டியில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் தி.மு.க. 4 ஆண்டுகள் கால ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு வத்தலக்குண்டு தி.மு.க. கிழக்கு ஒன்றிய செயலாளர் கனகதுரை தலைமை வகித்தார். மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளரும், முன்னாள் ஒன்றிய கவுன்சிலருமான விஜயகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜன், பொறுப்பு குழு உறுப்பினர்கள் ரகு, முத்து, பரமன், ஆரோக்கியசாமி, மாவட்ட வழக்கறிஞர்அணி பொறுப்பாளர் வினோத் கண்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கிருத்திக் தர்ஷன் வரவேற்றார்.

தலைமை கழக பேச்சாளர்கள் போடி காமராஜ், சையது முஷரப் ஆகியோர் தி.மு.க. ஆட்சியின் 4 ஆண்டு கால சாதனைகளை விளக்கி பேசினர். கூட்டத்தில் தி.மு.க. நிர்வாகிகள் முத்துராமன், நரசிம்மன், சந்திரசேகர், வரதராஜன், சின்னா, நாகூர் மீரான், சபேஷ்,வசந்தாஉள்படஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன் நன்றி கூறினார்.

# செந்துறையில் உலக நன்மை வேண்டி கஞ்சிகலைய ஊர்வலம்



**நத்தம், ஆக.11-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை-குரும்ப பட்டியில் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் சார்பில் உலக நன்மை வேண்டியும், விவசாயம் செழிக்க வேண்டியும் கஞ்சிக் கலைய ஊர்வலம் நடந்தது.

இதில் மன்றத்தில் இருந்து கிளம்பிய ஊர்வலம் முக்கிய . வீதிகள் வழியாக சென்று மீண்டும் கோவிலை வந்தடைந்தது. தொடர்ந்து ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்ட கஞ்சிகலயங்கள் கோவிலில் வைக்கப்பட்டு சிறப்பு தீபாராதனைகள் நடந்தது.

இதில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு அன்னதானம் வழங்கபட்டது.



மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து வடக்கு 2- ம் பகுதி அ.தி.மு.க.சார்பில் அதன் பகுதி செயலாளர் வி.கணேசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், கே.ஜெயவேல், வி.பி. ஆர்.செல்வகுமார் மற்றும் எஸ்.முருகன், முத்துகுமார், எம்.தினேஷ்குமார், சுந்தரபாண்டி, ராகவி, என்.பாண்டிசெல்வம், பி.பால்பாண்டி, ஏ.ஆர்.வேல்மணி, பீ.பீ.குளம் மகேந்திரன், எம்.ஜி.ஆர். ஹோட்டல் கண்ணன், பாண்டித்துரை, எம்.சிவா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### முதல்வர் உடல் நலம் பெற்றதையடுத்து

# சோட்டானிக்கரை பகவதி கோவிலுக்கு ரூ. பல லட்சம் மதிப்பிலான பூக்கள் காணிக்கை

### முன்னாள் ஊராட்சி தலைவர் வழங்கினார்



**வத்தலகுண்டு, ஆக.11-**

தமிழக முதல்வர் உடல் நலம்பெற்று வீடு திரும்பியதையடுத்து சோட்டானிக்கரை பகவதி அம்மன் கோவிலுக்கு நிலக்கோட்டை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுகந்தா கரிகால பாண்டியன் ரூ. பல லட்சம் மதிப்பிலான பூக்களை காணிக்கையாக வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோட்டூர் ஊராட்சியைச் சேர்ந்தவர் சுகந்தா கரிகால பாண்டியன், தீவிர தி.மு.க. குடும்பத்தைச் சேர்ந்த இவர் கடந்த ஐந்தாண்டுகளாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற தலைவராகவும் இருந்து சிறப்பாக பணியாற்றி பலதரப்பினரிடமிருந்து பாராட்டுகளை பெற்றவராவார்,

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது. அவர் பூரண நலம் பெற்று குணமடைய வேண்டி. அவரின் விருப்பதெய்வமான கேரள மாநிலம் சோட்டானிக்கரை பகவதி அம்மனுக்கு வேண்டியிருந்தார். அதற்கு காணிக்கை செலுத்தும் விதமாக ஆடி மாதம் நடைபெறும் சப்தாகம் பூஜைக்காகவும் ஆலையத்தை அலங்கரிக்கவும் கடந்த 10-நாட்களாக தினமும் 500-கிலோ வீதம் ரூ. பல லட்சம் மதிப்பிலான பூக்களை மாலையாககட்டி அனுப்பி வருகிறார்.

இது குறித்து அவர் கூறுகையில் தமிழகத்தில் சனாதனத்தை துணிந்து எதிர்த்தும், அரசின் திட்டங்கள் கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து நிறைவேற்றி வரும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கடந்த வாரம் திடீரே உடல் நலம் பாதிக்கப்பட்ட போது என் குடும்பத்தில் அனைவரும் வேதனையுற்றோம், இதனால் எங்கள் குடும்ப விருப்ப தெய்வமான சோட்டாணிக்கரை பகவதியம்மனுக்கு பூக்கள் காணிக்கை செலுத்துவதாக வேண்டியிருந்தேன் அதன்படி தினமும் பட்டு ரோசா, செவ்வந்தி, செண்டுமல்லி உள்ளிட்ட வாடாத மலர்களை எவ்வளவு விலையானாலும் வாங்கி தினமும் சுமார் 500-கிலோ வீதம் வாங்கி 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மூலம் மாலையாக கட்டி லாரிகள் மூலம் அம்மன் ஆலயத்திற்கு அனுப்பி வருகிறோம் என்றார்.

### ஒட்டன்சத்திரத்தில்

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழிலாளர் சங்க பேரவை கூட்டம்



**ஒட்டன்சத்திரம், ஆக.11-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழிலாளர் சங்க ஆண்டு பேரவை கூட்டம் மாவட்டத் தலைவர் பஷீர் தலைமையில் நடைபெற்றது. மாநில பொறுப்பாளர் சரவணன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும், ஆள் குறைப்பு நடவடிக்கையை கைவிட வேண்டும், நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளை விரைவில் முடிக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் ஐயப்பன், மாவட்ட தலைவர் கணேசன், பொருளாளர் தேசிதேரிஷ், துணைத் தலைவர்கள் ராஜவேல், முருகராஜ், துணைச் செயலாளர் சக்திவேல், கமிட்டி உறுப்பினர்கள் கணக்கம்பட்டிதுரைசாமி, மகுடீஸ்வரன், அக்னி துரை,சின்னச்சாமி, கார்த்திகேயன், கூத்தம் பூண்டிதுரைச்சாமி உள்ளிட்டோர் புதிய நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# சேவுகம்பட்டியில் தி.மு.க. அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க கூட்டம்



**வத்தலக்குண்டு, ஆக.11-**

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் வத்தலகுண்டு வடக்கு ஒன்றிய சேவுகம்பட்டி பேரூர் இளைஞரணி சார்பில் கருணாநிதி பிறந்த நாள் விழா, தி.மு.க. அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரசாரக் கூட்டம் அண்ணாநகர் உசிலம்பட்டி பிரிவு அருகே நடைபெற்றது.

கூட்டத்திற்கு வத்தலகுண்டு வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, சேவுகம்பட்டி பேரூர் செயலாளர் தங்கராஜன், சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் வனிதாதங்கராஜன், துணைத் தலைவர் தெய்வராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மகாமுனி சேவுகம்பட்டி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் சிவா ஆகியோர் வரவேற்றார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக தலைமைக் கழக பேச்சாளர் சாவல்பூண்டி சுந்தரேசன், இளம் பேச்சாளர் செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு அரசு 4 ஆண்டுகளில் மகளிர் இலவச விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை, பள்ளிமாணவ-மாணவிகளுக்குகாலைஉணவு திட்டம், மாணவிகளுக்கு ரூ.1000, நான் முதல்வன் திட்டம், உங்களுடன் ஸ்டாலின், நலன் காக்கும் ஸ்டாலின் அரசின் சாதனைகளை பொது மக்களிடம் விளக்கி கூறினார்கள்.

கூட்டத்தில் வடக்கு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் செல்வராஜ், முருகேசன், கார்த்திக், சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் தவபாண்டியன், பாலமுருகன், தனபால், நாகராணி, பாண்டியம்மாள்,வார்டுசெயலாளர்கள்கோப்பெரும்பழுதி,பாலசுப்பிரமணி, பெத்தண்ணன், சீனிவாசன்,கோபாலகிருஷ்ணன்,செல்வராஜ் உள்பட ஒன்றியபேரூர்நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டமுடிவில் சேவுகம்பட்டி பேரூர் இளைஞரணி துணை அமைப்பாளர் மருதுபாண்டி நன்றி கூறினார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## கவனமீர்க்கும் சென்டர் ஃப்ரெஷின் புதிய தொலைக்காட்சி விளம்பரம்

**மதுரை, ஆக.11-**

பெர்ஃபெட்டி வான் மெல்லே இந்தியா நிறுவனத்தில் இருந்து இந்தியாவின் மிகவும் விரும்பப்படும் சூயிங் கம் பிராண்டுகளில் ஒன்றான சென்டர் ஃப்ரெஷ், அதன் வாடிக்கையாளர்களின் அதிகப்படியான சிந்தனையைப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு புதிய விளம்பர பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் கருத்து யூகோவ் உடன் இணைந்து உருவாக்கப்பட்ட சென்டர் ஃப்ரெஷின் "இந்தியா ஓவர் திங்கிங் ரிப்போர்ட்" மூலம் தூண்டப்பட்டது, மேலும் 81% நபர்கள் தினமும் மூன்று மணி நேரத்திற்கும் மேலாக அதிகமாகச் சிந்திக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்தது. அதன் புதிய விளம்பரமான "டிமாக் பே ரக்கே லகம்" மூலம், சென்டர் ஃப்ரெஷை ஒரு சிறிய ஓய்வு நேரமாக சித்தரிப்பதன் மூலம் இந்த யோசனையில் ஒரு வேடிக்கையான திருப்பத்தை ஏற்படுத்துகிறது, இது திடீர் புத்துணர்ச்சியுடன் உங்களை உடனடியாக நிகழ்காலத்திற்கு கொண்டு வரும்.

இந்த விளம்பரம் பற்றிப் பேசுகையில், பெர்ஃபெட்டி வான் மெல்லே இந்தியாவின் சந்தைப்படுத்தல் இயக்குனர் குஞ்சன் கேத்தன் அவர்கள் இவ்வாறு கூறினார், "சென்டர் ஃப்ரெஷ் எப்போதும் புத்துணர்ச்சிக்காக நிற்கிறது - மேலும் இப்புதிய விளம்பரத்துடன், புத்துணர்ச்சியின் புதிரான வெடிப்பு அதிகப்படியான சிந்தனையின் சுழற்சியை உடைத்து தெளிவின் தருணங்களைக் கொண்டுவர உதவும். சமீபத்தில் வெளியிடப்பட்ட எங்கள் சென்டர் ஃப்ரெஷ் இந்தியா ஓவர்திங்கிங் அறிக்கையின் உட்பார்வைகளால் ஈர்க்கப்பட்டு, அதிகப்படியான சிந்தனையின் அந்த வேடிக்கையான தருணங்களை இத்தொலைக்காட்சி விளம்பரம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. 'டிமாக் பே ரக்கே லகாம்' என்ற டேக்லைனுடன், நுகர்வோர் ஒரு இடைநிறுத்தம் செய்யவும், நிகழ்காலத்தில் இருக்கவும், எண்ணங்கள் அலையத் தொடங்கும்போது ஒரு புதிய பார்வையை அனுபவிக்கவும் நாங்கள் ஊக்குவிக்கிறோம்."

## ஓடிசாவின் 46 நகரங்களில் கவுடியோவின் ஏ.ஐ டாஷ்கேம்களை எடுத்துச் சென்றார் அங்கித் ஆச்சார்யா

**சென்னை, ஆக.11-**

இந்தியாவின் சாலைகளை உலகின் மிகவும் பாதுகாப்பானதாக மாற்றும் நோக்குடன் செயல்படும் ஏ.ஐ சார்ந்த வீடியோ டெலிமாடிக்ஸ் ஸ்டார்ட்அப் நிறுவனமான கவுடியோ, இப்போது கூடுதல் $1.8 மில்லியன் விதைப்புத் தொகை பெற்றுள்ளது.

இந்த முதலீட்டுச் சுற்றை அமல் பாரிக் தலைமைத்துவம் வகித்தார். மேலும் இதில் 8i வெஞ்சர்ஸ், AU சிறு நிதி வங்கி, விபா சேதன் (செராவி வெஞ்சர்ஸ் பங்குதாரர்) மற்றும் வெஞ்சர் கேட்டலிஸ்ட் ஆகியோர் பங்கேற்றனர்.

மற்றும், மல்டிபிளை வெஞ்சர்ஸின் நிறுவனர் ரவீன் சாஸ்திரி, பவுன்ஸ் இணைநிறுவனர் விவேகானந்த ஹல்லேகரே, ஜார் இணைநிறுவனர் நிஷ்சய் ஏ.ஜி ஆகியோர் இந்த நிறுவனத்தை ஆதரித்துள்ளனர்.

இதன் மூலம் கவுடியோவின் மொத்த விதைப்புத் தொகை $3 மில்லியன் ஆக உயர்ந்துள்ளது. ஏற்கனவே கடந்த ஏப்ரல் மாதம், $1.2 மில்லியன் முதலீட்டை அறிவித்திருந்தது.

கவுடியோ நிறுவனம், ஏ.ஐ தொழில்நுட்பம் மற்றும் டாஷ்கேம்கள் மூலம் பயணத்தை பாதுகாப்பானதாக மாற்றும் நோக்கத்தில் செயல்படுகிறது. இது பொதுப் போக்குவரத்து, பள்ளி வாகனங்கள், மற்றும் வணிக வாகனங்கள் போன்றவற்றில் அபாயங்களை உணர்ந்து தடுக்கும் வல்லமை பெற்றது.

நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி அங்கித் ஆச்சார்யா கூறுகையில்: "இந்தியாவின் சாலைகளுக்கு பயத்தை விட பொறுப்பும் பாதுகாப்பும் தேவை. கவுடியோவில், நாங்கள் பாதுகாப்பை காணக்கூடியதாகவும் செயல்படக்கூடியதாகவும் மாற்றும் தொழில்நுட்பத்தை உருவாக்குகிறோம். ஒவ்வொரு அலர்ட்டும் ஒரு விபத்தைக் தடுக்கும் வாய்ப்பு. ஒரு குடும்பத்தை பாதுகாப்பது, ஒரு உயிரைக் காக்கும் முயற்சி – இதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்."

இணைநிறுவனர் மற்றும் தலைமை தொழில்நுட்ப அதிகாரி பிரஞ்சல் கூறினார்:

முதலீட்டாளர் அமல் பாரிக் கூறுகையில்: "கவுடியோவில் என்னை கவர்ந்தது - பிரச்சனையை ஆழமாக புரிந்துகொள்ளும் நிறுவுநர்கள், இதயத்துடனும் உற்சாகத்துடனும் கட்டியமைக்கும் குழு. இந்தியாவின் மிக அவசரமான மற்றும் புறக்கணிக்கப்படும் பிரச்சனை ஒன்றான சாலை பாதுகாப்பில் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். ஏ.ஐ மற்றும் இன்ப்ராஸ்ட்ரக்ச்சர் சேர்ந்து புது பாதையை உருவாக்குகிறார்கள். டாலால் வீதியின் ஒழுக்கமும், இனோவேஷன் வீதியின் சவால்களும் இங்கே சந்திக்கின்றன. அவர்களின் பயணத்தில் பங்கெடுக்க மிகவும் மகிழ்ச்சி."



மதுரையில் நடந்த நுகரப்பொருள் அண்ட் ஷாப் மொத்த வியாபாரிகள் சங்க கூட்டத்தில் தலைவர் மோகன் பேசினார் அருகில் நிர்வாகிகள்

# சர்வதேச போட்டிகளில் பதக்கங்களை வென்ற மாணவர்களுக்கு பாராட்டு



**திருமங்கலம், ஆக.11-**

கோவையில் நடைபெற்ற 7 வது சர்வதேச கராத்தே மற்றும் சிலம்ப போட்டிகளில் 50 பதக்கங்களுக்கு மேல் வென்று சாதனை படைத்த திருமங்கலம் சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

கோவையில் ஹயாஷிகா கராத்தே பெடரேசன் மற்றும் பைட்டர் அகாடமி சார்பில் 7வது சர்வதேச கராத்தே மற்றும் சிலம்ப போட்டிகள் நடைபெற்றது. இந்த போட்டியில் மதுரை மாவட்டம் திருமங்கலத்தை சேர்ந்த உலக பாரம்பரிய சோட்டா கான் கராத்தே சம்மேளனத்தின் தமிழ்நாடு பொருளாளர் பொன்னுச்சாமி (எ) கராத்தே ராஜா மற்றும் தொழில்நுட்ப இயக்குனர் திருப்பதி ஆகியோர் தலைமையில் திருமங்கலம் சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி, முதல் ஆயுதம் சிலம்பாட்ட பள்ளி மாணவ, மாணவிகள் 54 பேர் கலந்து கொண்டனர்.

இதில் கட்டா, குமிட்டே பிரிவுகளில் கராத்தே போட்டியும், ஒற்றை, இரட்டை கம்பு பிரிவுகளில் சிலம்ப போட்டியும் நடத்தப்பட்டது.7 வயது முதல் 18 வயது வரையிலான மாணவர்களுக்கு தனித்தனியாக போட்டிகள் நடைபெற்றது.இந்த போட்டிகளில் களமிறங்கி திறமைகளை வெளிப்படுத்திய திருமங்கலம் சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி, முதல் ஆயுதம் சிலம்பாட்ட பள்ளி மாணவர்கள் சிலம்ப போட்டியில் 7 தங்கம், 5 வெள்ளி, 3வெண்கல பதக்கங்களையும் வென்றன. மேலும் கராத்தே போட்டியில் கட்டா பிரிவில் 11 தங்கம், 4 வெள்ளி, 7 வெண்கலம் மற்றும் குமிட்டே பிரிவில் 5 தங்கம், 4 வெள்ளி, 10 வெண்கல பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர். இவர்களுக்கு மலேசிய - ஆசிய பசிபிக் கராத்தே அமைப்பின் தலைவர் டோனி பொன்னையா, செயலாளர் தியாகு பொன்னையா, ஜப்பான் ஹயோசிகா கராத்தே அமைப்பின் தலைவர் விகாஷ் ஷிவோதாஸ் மற்றும் போட்டி அமைப்பாளர் ரமேஷ் குமார் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

இதையடுத்து 7 வது சர்வதேச அளவிலான கராத்தே, சிலம்ப போட்டியில் 50 க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்று சாதனை படைத்த திருமங்கலம் பகுதி மாணவ, மாணவியர்களுக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டு பாராட்டு விமா நேற்று சிறப்பாக நடைபெற்றது. அப்போது பதக்கங்களை வென்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் பதக்கம் வென்றிட பயிற்சியளித்த சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனர் பொன்னுச்சாமி (எ) கராத்தே ராஜா, டெக்னிக்கல் இயக்குனர் திருப்பதி ஆகியோருக்கும் பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.இந்த கராத்தே மற்றும் சிலம்ப போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மலேசியா மற்றும் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சர்வதேச போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். இந்நிகழ்வினில் மாணவ, மாணவியரின் பெற்றோர், பயிற்சியாளர்கள் மனோஜ், வரதராஜன், ஷக்கீல் கமலேஷ், விருதுநகர் (பொ) சல்மான்கான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உலக நன்மை வேண்டி மெட்டூர் ஜம்புதுரை அம்மன் கோவிலில் திருவிளக்கு பூஜை

**நிலக்கோட்டை, ஆக.11-**

ஆடி திருவிழாவை முன்னிட்டு கொடைரோடு அருகே மெட்டூரில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஜம்புதுரை அம்மன் கோவிலில் உலக நன்மை வேண்டி 200-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைரோட்டை அடுத்த மெட்டூர் கிராமத்தில் உள்ள நூறாண்டு பழமையான ஸ்ரீ ஜம்புதுரை அம்மன் கோவில் ஆடித் திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு பால், தயிர், நெய் உள்ளிட்ட 21 வகையான வஸ்துகளால் அபிஷேக ஆராதனைகள் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது,

இதனையடுத்து சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய அம்மன் பக்தர்களுக்கு அருள்பாளித்தனர்,தொடர்ந்து உலக நன்மை வேண்டியும்,மழை பெய்ய வேண்டியும்,விவசாயம் செழிக்கவும் 200-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்ட திருவிளக்கு பூஜை நடைபெற்றது, இதில் அம்மன் பாசுரங்களை பாடி அம்மனை தரிசனம் செய்தனர், இந்த பூஜையில் மெட்டூர் கிராமக்கள் உட்பட சுற்றுவட்டாரபகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர், விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது,

ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months there after
I, T.THARANI,
D/o.S.Thirumurugan, Aged 23 years, Permanently residing at 1/53, North Street, Perungalur, Ramanathapuram Dist. 623530.Tamilnadu. intend having my enrolment as an advocate moved Before the Bar Council of Tamilnadu,Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

T.THARANI

ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months thereafter. I, MANOJ KUMAR S S/o. SELVARAJ S aged 23 years Permanently Residing at No.2/255, Pudhu Kalanjipatti, Kalanjipatti Post, Oddanchatram Taluk, Dindigul District, Tamil Nadu Pin : 624619. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu & Puducherry, High Court Building, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

MANOJ KUMAR S

மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், மதுரை தாலுகா.
I.A.No: 188 / 2024 in
A.S.No: ---- / 2024
சகாயம் அலெக்ஸாண்டர்,
— மனுதாரர்/மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்.
— எதிர் —
ஸ்டாலின் ஜோசப் மற்றும் 3 நபர்கள்
— எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்
J.ஆரோக்கியராஜ் @ சுரேஷ்
— 3-ம் எதிர்மனுதாரர்/ 3-ம் பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரர்/மேல்முறையீட்டாளரால் காலதாமத மனு மாண்புமிகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து I.A.No: 188 / 2024 in A.S.No: ---- / 2024 என நம்பராகி அதன் வாய்தா 04.09.2025 அன்று 3-ம் எதிர்மனுதாரர் / 3-ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞரோ மாண்புமிகு நீதிமன்றத்தில் காலை 10.00 மணியளவில் ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் 3-ம் எதிர்மனுதாரர் / 3-ம் பிரதிவாதி ஆகிய தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
G.ஆறுமுகம் B.A.,LL.B.,
வழக்கறிஞர், மதுரை.

சார்பு நீதிமன்றம், வேடசந்தூர்.
I.A.No.1/2024
A.S.No.12/2024
பழனியம்மாள் மற்றும் ஒருவர்
....மனுதாரர்கள்/அப்பீல் வாதிகள்
//ஏதிர்//
கோடாங்கி மற்றும் 3 நபர்கள்
....எதிர்மனுதாரர்கள்/அப்பீல் பிரதிவாதிகள்
1) மாரியம்மாள், க/பெ.லேட்.குமரன் வேங்கனூர், அய்யலூர் கிராமம்,வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.
2) வேங்கன், த/பெ.லேட்.குமரன், குரும்பப்பட்டி, வி.பூதிப்புரம் கிராமம், மினுக்கம்பட்டி அஞ்சல், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.
3) கார்த்தி, த/பெ.லேட்.குமரன், வேங்கனூர், அய்யலூர் கிராமம், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.
.....புரோ 5,6 மற்றும் 8 அப்பீல் பிரதிவாதிகள்
பொது அறிவிப்பு
அப்பீல் வாதிகளால் சமூகம் நீதிமன்றத்தில் அப்பீல் பிரதிவாதிகளுக்கு எதிராக அப்பீல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்பீல் வழக்கில் வாரிசு மனு I.A.No.1/2024ல் புரோ 5,6 மற்றும் 8 புரோ எதிர்மனுதாரர்கள்/புரோ 5,6 மற்றும் 8 புரோ அப்பீல் பிரதிவாதிகளாக தங்களை சேர்க்க வாதி மனு தாக்கல் செய்து தாங்கள் ஆஜராக வருகின்ற 20.08.2025ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அதன் மேற்படி காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும், தவறும்பட்சம் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
S.செல்வக்குமார் B.A.,B.L.,
வழக்கறிஞர், திண்டுக்கல்.

முதன்மை சார்பு நீதிமன்றம்
திண்டுக்கல்
O.S.No: 823/2019
கனரா வங்கி,
நாகல் நகர் கிளை அதன் மேலாளர் மூலம் திண்டுக்கல்.
.....வாதி
// எதிரிடை //
C.மாதவன்,
த/பெ.P.L.சின்னையா,
இலக்கம்:-
15, மெங்கில்ஸ் ரோடு,
நாகல்நகர், திண்டுக்கல் டவுன்,
திண்டுக்கல் தாலுகா
......1ஆம் பிரதிவாதி
அறிவிப்பு
சமூகம் நீதிமன்றத்தில் வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்ப்பட்டு 1-ஆம் பிரதிவாதி ஆஜராகுவதற்கு வருகின்ற 25.08.2025 ஆம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் ஷை நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவிக்கவும். தவறினால் தங்கள் மீது ஒருதலைபட்சமாக வழக்கில் தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.
A.SELVAM MA.,ML.,
DLLAL., PGD.JMC.
ADVOCATE & NOTARY,
DINDIGUL.

குடும்பநல நீதிமன்றம்
திருப்பூர்
MC.No.57/2024
M.ஜோஸ்பின் பிரியா,
த/பெ.மரியசூசை,
பிள்ளையார் கோவில் தெரு,
25, கள்ளம்பாளையம்,
திருப்பூர்
...... மனுதாரர்
// எதிரிடை //
பிரவீன் லாசர்ஸ்
த/பெ.அலோசியஸ்,
மேற்கு மரியநாதபுரம்,
திண்டுக்கல்
....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் பராமரிப்பு செலவு தொகை கேட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. தற்பொழுது அம்மனு வருகின்ற 16.08.2025 ஆம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் ஷை நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவிக்கவும். தவறினால் தங்கள் மீது ஒருதலைபட்சமாக வழக்கில் தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.
A.SELVAM MA.,ML.,
DLLAL., PGD.JMC.
ADVOCATE & NOTARY,
DINDIGUL.

